# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி
## கூட்டுத்தாபனம் (திருத்தம்)

***1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும்
அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்
2019, மே மாதம் 07 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***278 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்திற்கான விரிவுப் பெயரை திருத்துகின்றதென்பதுடன் அப்பிரிவின் சட்டப்பயனானது "இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்" எனும் பெயரை "இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனமாக" மாற்றுவதற்கானதுமாகும்.*

***வாசகம் 3 மற்றும் 4 :*** *இவ்வாசகங்களினால் ஆக்கப்பட்ட திருத்தங்கள் வாசகம் 2 இனால் செய்யப் பட்ட திருத்தத்திற்கான விளைவாந்தன்மையினதுமாகும்.*

## இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தம்)

*ச.வ.- ஓ 54/2018*

### *1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற் கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப்பெயர்.*

***1.*** இச்சட்டம், 2019 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சட்டத்திற்கான விரிவுப் பெயரைத் திருத்துதல்.*

***2.*** (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனச் சட்டத்திற்கான விரிவுப் பெயரானது, ''இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்'' என்னும் சொற்கள் விரிவுப் பெயரில் காணப்படும் இடங்களிலெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத் திற்கும் வேறு எழுத்திலான சட்டங்களுக்கு மான பொதுவான திருத்தம்.*

***3.*** (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்தி லான சட்டத்திலும், ''இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்'' என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டங்களிலும் காணப்படும் இடங்களி லெல்லாம் அத்தகைய சொற்களுக்குப் பதிலாக, ''இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்'' என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தல், அறிவிப்பு, ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்தில், ''இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கான'' ஒவ்வொரு குறிப்பீடும்,

“இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கான” குறிப்பீடு ஒன்றாக வாசித்து பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

ஐயங்களைத் தவிர்த்தல்.

**4**. ஐயங்களைத் தவிர்ப்பதற்காக, “இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்” எல்லா நோக்கங்களுக்குமாக, “இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கான” அடுத்துறுப வராகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.